**CC**.**No**. 109/2025

**Date**: 14.05.2026

**ம.சா. 1. பாண்டியராஜன், த/பெ. ஜெயராமன், காரைக்குடி**
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.05.2026**

**குறுக்கு விசாரணை**

**1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 வது வரை படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் ரியல் எஸ்டேட் மற்றும் கார் வாங்கி விற்பனை செய்து வருகிறேன். எனது தொழில் தொடர்பாக எந்த ஒரு ஆவணமும் இல்லை என்றால் சரிதான். நான் நிதிநிறுவனத்தில் பணிபுரிகிறேனா என்றால் இல்லை. JBR பைனான்ஸ் எனது நிறுவனமா என்றால் நான் மற்றும் ஜெனிபர் ஞான சௌந்தரி உரிமையுடையதாகும். எப்போது தொடங்கப்பட்டது என்றால் 2014 –2016 ல் இருக்கும் சரியாக நினைவில்லை.தற்போது அந்த நிறுவனம் உள்ளதா என்றால் இல்லை. என்போது நிறுவனம் மூடப்பட்டது என்றால் 2020–2021. நிறுவனம் தொடங்கப்பட்டது மற்றும் முடிக்கப்பட்டதற்கு ஆவணம் உள்ளதா என்றால் தொடங்கப்பட்டதற்கான அரசாங்க உரிமம் உள்ளது. உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாரா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். நிதி நிறுவனத்தில் இருந்து எந்தெந்த நபர்கள் பணம் கட்டியுள்ளார்கள் போன்ற விபரம் பராமரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் கணக்கு வழக்குகள் என்வசம் உள்ளதா என்றால் உள்ளது.**

**2) ஜெனிபர் ஞான சௌந்தரி பணம் வசூலுக்காக நீதிமன்றத்தில் எந்த வழக்கும் தற்போது வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த வருடத்தில் இருந்து காசோலை வழக்கு தாக்கல் செய்து வருகிறேன் என்றால் 2010 முதல் தாக்கல் செய்து வருகிறேன். JBR பைனான்ஸ்ற்கான வருமானவரி தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. தற்போது வரை எத்தனை காசோலை வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சுமார் 45–50 வழக்குகள் இருக்கும். தற்போது நிலுவையில் எத்தனை வழக்குகள் உள்ளது என்றால் 12–15 வழக்குகள் எனது பெயரில் நிலுவையில் உள்ளது.**

3) எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவரது தாயார் மஞ்சுளா மூலம் தெரியும். JBR பைனான்ஸ் எங்கிருந்தது என்றால் கன்டனூர் ரோடு ஐஸ்கேணி வீதியில் இருந்தது. தற்போது வட்டிக்கு பணம் கொடுத்து வருகிறேனா என்றால் தெரிந்த நபர்களுக்கு கொடுப்பேன், தொழிலாக செய்யவில்லை. மஞ்சுளா என்பவரை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் என் அலுவலகத்தில் cleaning பணி செய்வதன் மூலம் தெரியும். எதிரி எங்கு பணி புரிகிறார் என்றால் மினரல் வாட்டர் கம்பெனியில் பணிபுரிகிறார். எனது வீடு எங்குள்ளது என்றால் TT நகர் 7 வது வீதியில் தற்போது உள்ளது. 100 அடி ரோட்டில் எனக்கு எதுவும் அலுலவகம் உள்ளதா என்றால் இல்லை.

4) எதிரிக்கு எவ்வளவு தொகை கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் ரூ.50,000/- . எதிரி மேற்படி தொகையை திருப்பி செலுத்த தகுதி உடையவரா என்றால் தகுதி உடையவர். எதிரி என்ன தேவைக்காக பணம் வாங்கினார் என்றால் குடும்ப தேவை என்று கூறினார். பணம் கொடுக்கும் என்ன என்ன நடைமுறைகள் பின்பற்ற வேண்டும் என்பது தெரியுமா என்றால் தெரியும். பணம் கொடுக்கும் போது என்ன ஆவணம் பெற்றேன் என்றால் எதிரி புரோநோட் கொடுத்தார். புரோநோட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். புரோநோட்டில் சாட்சிகள் உள்ளார்களா என்றால் இல்லை. புரோநோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால்தான் தற்போதைய வழக்கின் உண்மைதன்மை தெரியவரும் என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். பொன்னழகு என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இ ல்லை. பொன்னழகு என் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான் 6 மாதங்களுக்கு குன்றக்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.

5) பொன்னழகு மகளிர் குழு தலைவியாக இருந்து வந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பொன்னழகு அவரது ஏரியாவில் உள்ள பெண்களுக்கு ரூ.10,000/- முதல் 20,000/- ஆயிரம் வரை நிதி நிறுவனங்களின் மூலம் பெற்று கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். கடன் வசூல்களை அட்டையில் பதிவு செய்யப்படும்

என்றால் சரிதான். புரோநோட் கொடுத்ததாக சொல்லும்போது எதிரி காசோலை கொடுக்கவில்லை என்றால் சரிதான். காசோலையை எப்போது வசூலுக்கு போட்ட விபரம் எதிரிக்கு தெரியாது என்றால் சரியல்ல, வசூலுக்கு போடுமாறு சொல்லித்தான் கொடுத்தார். ம.சா.ஆ.1 வழக்கு காசோலையில்எதிரியின் கையொப்பத்தின் மையும், நிரப்பிய விபரமும் வேறு மையினால் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. காசோலையில் யார் நிரப்பினார்கள் என்றால் எனக்கு தெரியாது. காசோலையை நிரப்பியபடி எதிரி கொண்டுவந்தார், என் முன்பு கையொப்பம் செய்தார். கொடுத்ததாக கூறப்படும் தொகைவேறு நபருக்கு தெரியுமா என்றால் பணம் கொடுக்கும்போது நான் மட்டும்தான் இருந்தேன். காசோலையில் எதிரி கையொப்பம் செய்ததாக கூறும்போது வேறு நபர்கள் இருந்தார்களா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.14 17:25:35 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.